

மக்களின் உரிமைக் குரல் சட்டமன்றத்தில் ஒலிக்கவும், திருச்சுழித் தொகுதியில் கழகத்தின் வெற்றியை உறுதி செய்யவும் 'உதயசூரியன்' சின்னத்திற்காக தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தி.மு.க. வேட்பாளர் தங்கம் தென்னரசுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

### தி.மு.க. ஆட்சியில் கல்வி முதல் அனைத்துத் துறைகளிலும் அபார சாதனை!

# தமிழ்நாட்டைக் காக்க மீண்டும் தலைவர் மு.க.ஸ்டாலினை முதல்வராக்குவோம்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் பிரச்சாரம்!

சென்னை, ஏப்.18-

திராவிட மாடல் ஆட்சியில் கல்வி முதல் அனைத்துத் துறைகளிலும் அபார சாதனைகளை நிறைவேற்றியுள்ளது எனவும், தமிழ்நாடு தலைகுனியாமல் காத்திட நமது திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பினைத் தொடர்ந்திட பாடுபடுவோம் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:-

தி.மு.க. ஆட்சியில் கல்வி தரம் உயர்த்திருப்பதற்கு இதைவிட சான்று உள்ளதா?



எல்லா மாநிலமும் திரும்பிப் பார்க்க வைக்கும் அளவிற்கு அரசு பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்கு நிகராக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

சென்னை அரசுப் பள்ளிகளில் குழு செயல்பாடுகள் மூலம் கற்பித்தல், மாணவர்கள் செய்தித்தாள் வாசித்தல், விளையாட்டின் மூலம் கற்பித்தல், செயல் வழிமுறை மூலம் கற்பித்தல், வண்ணம் தீட்டுதல் மூலம் சுகாதாரத்தை கற்பித்தல், மின்னணு தொடுதிரை மூலம் கற்றல், தற்காப்பு கலை, பாலின சமத்துவ கல்வி, 4 மற்றும் 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச கல்வி சுற்றுலா, தீ விபத்து விழிப்புணர்வு, தையல் பயிற்சி என தனியார் பள்ளிகளுக்கு இணையாக திராவிட மாடல் அரசில் மாணவர்களின் கல்வித்தரம் பல மடங்கு உயர்ந்துள்ளது.

தேசத்தை காக்க, ஜனநாயகத்தை மீட்க, சிறுபான்மையினரை பாதுகாக்க, பெண்கள் நலமுடன் வாழ, திராவிட நல் திருநாடு முன்னோடியாக விளங்க மதச்சார்பற்ற அடையாளத்தை பாதுகாப்பதிலும், சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதி செய்வதிலும், தமிழ்நாடு எந்த சூழ்நிலையில் தலை வணங்காது, பின்னடையாது.

போராடி வெற்றி பெறுவோம். இது மக்களாட்சி! சொல்லல்ல செயல் .வாக்களிப்பீர் உதயசூரியனுக்கு

இவ்வாறு தொகுதி வாரியாக நமது திராவிட இயக்கத்தின் தலைவர் திருமதி. ஓவியம் அவர்கள் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.



ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வரும் தொகுதி மறுவரையறை மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி தூத்துக்குடி தெற்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநில வர்த்தக அணி இன்னைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், ஒன்றியச் செயலாளர்கள் ராமநாதன், பாலசிங், நவீன் குமார், சதீஸ் குமார்,ஏ.பி.ரமேஷ் மற்றும் கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மு.அப்பாவு அவர்கள் பணகுடி பேரூராட்சிக்கு உட்பட்ட கோரி காலனி,பாம்பன்குளம்,துரை கிருஷ்ணாபுரம்,முத்துசாமிபுரம், சைதைம்மாள்புரம், புஷ்பவனம், தண்டையார்குளம்,சாத்தான்குளம் பணகுடி மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்குச் சேகரித்தார். நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்கள் நம்பி, ஆதி பாண்டி,வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, வள்ளியூர் நகரச் செயலாளர் சேதுராமலிங்கம், பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தொகுதி மறுவரையறை தொடர்பாக கொண்டுவரப்படும் சட்ட திருத்தத்திற்கு எதிர்ப்பை தெரிவித்து தென்காசி வடக்கு மாவட்டம் புளியங்குடியில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. சட்ட நகலை தீ வத்து எரித்தார். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# நூற்றுக்கு நூறு; மாற்றேது கூறு!

வாக்களிக்கும் தேர்தல் நாள்
வருகிறது விரைவாக!
வாக்குறுதி தளபதிதான்
வழங்குகிறார் நிறைவாக!
தேக்குறுதி மனங்கொண்ட
திமுக தொண்டர்காள்!
தீக்கங்குல் போல்நீங்கள்
திசையெங்கும் பரவுங்கள்,
ஈர்க்குச்சி எதிரிகள்
இல்லாமல்
உரசுங்கள்!
காக்கைகளாய் எங்கெங்கும்
கரைகின்றார் உங்களின்
சீழ்க்கைஒலி போதுமே,
சிதறுண்டு
போகுமே!

பூக்கமழும் தமிழ்நாட்டைப்
பொழில்கள்சூழ் நாடாக்கிக்
காக்கின்ற தொண்டினைக்
கண்ணுறக்கம் இல்லாமல்
மேற்கொண்டு செய்கின்ற,
வீரமகன் தளபதி
ஆக்கிய ஆட்சிதான்
அடுத்தினியும் தொடர்ந்திடத்
தூக்கிய கைகளுடன்
தோளுயர்த்தி
வாருங்கள்!
ஊக்கிய தளபதிக்கே
உயர்வெற்றி கூறுங்கள்!
தாக்கவரும் மதவெறியர்
தாள்பிடிக்கும் அடிமைகள்
காக்கவரும் வேடத்தில்
களவாடப் பார்க்கின்றார்;
தேக்கிய வெள்ளத்தைத்
திறந்துவிட்டாற் போலவே
வாக்குகள் பாயட்டும்
வாகைநமக்கு ஆகட்டும்!

போக்கியே வடபுலத்துப்
பொய்வேடர் ஓட்டிடத்
தீக்கனலாய்ச் சேருங்கள்;
தேர்தலெனும் வேள்வியில்
ஆக்குங்கள் சாம்பலாய்!
ஆயிரம்பல் ஆயிரம்
கூக்குரல் இட்டாலும்
கும்பிட்டுத் தொழுதாலும்
கேட்கத்தான் ஆளில்லாக்
கீழேவல் அடிமைகள்
வாக்கின்றிப் போகட்டும்
வறண்டமண் ஆகட்டும்!

ஆக்கந்தான் காண்பதற்கு
அரியணை ஏறுதற்கு
ஊக்கந்தான் குன்றாமல்
ஒவ்வொரு நொடியுமே
தூக்கந்தான் போனாலும்
துவளாதீர்;
சோராதீர்!
ஏக்கமுறும் மக்களின்
எதிர்காலம் வளமாக
நோக்கமுள்ள தளபதிதான்
நூற்றுக்கு நூறுபெற
வாக்களிக்க வாருங்கள்;
வளர்உதய சூரியன்
காக்கத்தான் எழுகின்றான்
காரிருள் அழிக்கின்றான்
நீக்குகின்றான்
அயர்வினை!
நீட்டுகின்றான் உயர்வினை!

மாக்களாய் மக்களை
மடமையில் வீழ்த்துகின்ற
போக்கிரிகள் வடநாட்டுப்
பொய்யர்தம் கையர்கள்
நாக்கிலே நரம்பின்றி
நாற்றமான புளுகுகளைச்
சாக்கிலே அவிழ்க்கின்றார்
சனாதனம் அளக்கின்றார்
மூக்கிலே வேர்க்கின்றார்
முழங்கித்தான் பார்க்கின்றார்!

கோலிகள் விளையாடும்
கோமாளி விடலைகளும்
கூலிகள் வாங்கியே
குத்தாட்டம் போடுகிற
காலிகளும் வைத்திங்கே
காவிகள்செய் கூத்துகள்
கேலிகளாய் மாறிடும்
கேளிக்கை ஆகிடும்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

போலிகளை நம்பியே
போரிட வந்துள்ளார்
வாலிழந்த குரங்காக
வைக்கின்றார் ஒப்பாரி!
நூலிழையும் மாறாது
நுணல்கூச்சல் வேகாது!

காலிழந்தான் ஓடுதல்போல்
கண்ணிழந்தான்
ஆடுதல்போல்
நாவிழந்தான் பாடுதல்போல்
நலமிழந்தான் வாழுதல்போல்
வேலிழந்தான் போரிடற்போல்
விதையில்லான்
ஏரிடற்போல்
கோலிழந்தான் ஆளுதல்போல்
கொடுங்கோலைக்
கொண்டிருப் போர்
கால்வீழ்ந்து கிடக்கின்ற
கருத்தில்லாக்
கபோதிகள்
வேலியாயின்
தோட்டத்தை
மேய்ந்துவிடும்
கூட்டங்கள்!

ஈக்களாய்க் கொசுக்களாய்
இடர்தரும் இவர்களைத்
தோற்கடிப்போம்!
தடமின்றித்
தொலைத்திடுவோம்,அதனாலே
சாக்காட்டைத் தேடுவார்,
தாள்போட்டு மூடுவார்;
பூக்காட்டைக் காட்டுவோம்,
புத்தாட்சி நாட்டுவோம்
வேக்காடு போனதென
வெற்றியைக் கூட்டுவோம்!

சிந்திக்கத் தெரிந்தவரே,
திரும்பித்தான்
பாருங்கள்!
அந்தநாள் முதலாக
அடுகடுக்காய்த்
தடைகளை
அறமின்றி எழுப்பியே
பிந்திநமைத் தள்ளுதற்குப்
பெருமுயற்சி செய்கின்றார்
விந்தியத்தின் மேலிருந்து
விளையாடும்
வினையாளர்!
இந்தபல கேடுகளை
எடுத்துரைத்தே அண்ணாதான்
சொந்தநாடே
சுரண்டுகிற
சூழ்ச்சியை வீழ்ச்சிசெய
இந்திமுதல் எத்தனையோ
இடர்களை ஒழித்திடச்
சிந்துபாடி எழுந்தவர்
தீட்டிய திராவிடமே
இந்தநாள் தளபதியின் இலக்க
ணமாம்! தேர்தலில்
முந்துவார்நம்
முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின்எனத்
துந்துபி எழுப்புவோம்;
தோள்தட்டி முழங்குவோம்!
வந்தது பெருவெற்றி
வாழ்கவெனப் பாடுவோம்!





மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் பரமக்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் கே.கதிரவனை ஆதரித்து முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கமுதி வடக்கு ஒன்றியத்தில் உள்ள அச்சங்குளம், உடைய நாதபுரம், தரைக்குடி ,போன்ற கிராமங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.முருகவேல், ஒன்றியச் செயலாளர் வி.வாசுதேவன்,மாவட்டத் துணைச் செயலாளர் கே.கருப்பையா, ஒன்றிய பெருந்தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், துணைத்தலைவர் அய்யனார், முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர் சந்திரசேகர், காரைக்குடி மண்டல தொ,மு,சா., பேரவை செயலாளர் பச்சம்மாள் உட்பட கட்சி நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.